**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.5/2025**
Prosecution: **PW7**

Deposition of the witness of **LW8**

| Name | திரு.பெருமாள் | District | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| Father Name | திரு.சுப்பிரமணி | Occupation | விவசாயம் |
| Village /Area | விளாபாக்கம் | Age | 49 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 6069 9641 4979 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் விளாப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1–சுதாகர், அ.சா.2–அஜித் குமார், அ.சா.3–அண்ணாமலை, அ.சா.4–ஜெகதீஷ், அ.சா.5 – ராகுல் மற்றும் அ.சா.6– வினோத் குமார் ஆகியோர் என் ஊரை சேர்ந்தவர்கள். கடந்த 24.10.2022–ம் தேதி நான் வீட்டில் இரவு 11.00 மணிக்கு இருந்த போது வெளியே பெருமாள் கோவில் அருகில் சண்டை நடக்கும் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்த போது யுவராஜ், கோகுல், தானேஷ் ஆகியோரும் அஜித் குமார், சுதாகர், அண்ணாமலை, ராகுல், ஜெய்கணேஷ், ஜெகதீஷ் ஆகியோர் அங்கு இருந்தனர். நான் பார்த்த போது யுவராஜ் கத்தியால் அஜித் குமாரை பின்புற கழுத்து, இடது மார்பு, வயிறு, இரண்டு கால்கள் ஆகிய பகுதிகளில் குத்தினார். சுதாகரை யுவராஜ் கத்தியால் வலது கணுக்கால், இடது கால் தொடை ஆகிய பகுதிகளில் குத்தி காயப்படுத்தினார். தடுக்க வந்த அண்ணாமலைக்கு வலது கை நடுவிரலில் காயம் ஏற்பட்டது. அடிபட்ட சுதாகரை நான் இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அஜித்குமாரை மற்றவர்கள் ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். பின்னர் அஜித் குமாரை மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–** இல்லை

BALAKRISHNAN
Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.